# ஐயமும்! தெளிவும்!!

**ஐயம் :** (புகாரி:1909) ஹதீஃதின் அடிப்படையில் பார்த்தால், 2 நாளும்(அதாவது) ஷஃபான் கடைசியிலும், ரமழான் கடைசியிலும், பிறை பார்த்து தானே நோன்பு பிடிக்கவும், விடவும் செய்ய வேண்டும். ஆனால் நீங்கள் ஒரே நாளில்(பல வருடங்களுக்கான) பிறையை கணக்கிட்டு விட்டு நோன்பையும், பெருநாளையும் தீர்மானிக்கலாமா?

M.J. சாதிக், காரமடை, கோவை.

**தெளிவு :** 1909 ஹதீஃத் என்ன கூறுகிறது என்பதை உன்னிப்பாகக் கவனியுங்கள். “அதைப் பார்த்து நோன்பை ஆரம்பியுங்கள். அதைப் பார்த்து நோன்பை விடுங்கள்....” என்றிருக்கிறதே அல்லாமல் அதைக் கண்ணால் பார்த்து (ரஃயல் ஜன்) என்று இல்லை. சாப்பிடுவது என்றால் வாயால் மட்டுமே சாப்பிடுவது போல் பார்ப்பது என்றால் கண்ணால் பார்ப்பது மட்டுமே என்று புரோகிதர் பீ.ஜை சொல்வது போல் பார்ப்பது என்பது கண்ணால் பார்ப்பது மட்டுமல்ல. பார்ப்பது என்றால் கண்ணால், உள்ளத்தால், தகவலால், ஆய்வால், கணிப்பால், கணக்கிட்டால் எனப் பற்பல பொருளைக் கொண்டதாகும். இந்த உண்மையை அன்றாடம் குர்ஆனைப் பொருள் அறிந்து படித்து வருகிறவர்கள் நிச்சயம் அறிய முடியும். ருஃயத் என்ற அரபி பதம் பல திரிபுகளில் சுமார் 300க்கும் மேற்பட்ட இடங்களில் குர்ஆனில் பல பொருள்களில் வருவதைப் பார்க்க முடியும். (பார்க்க: 37:102, 12:43)

புகாரீ 1909 ஹதீஃதைப் படித்த நீங்கள் 1910, 1911 ஹதீஃத்களையும் படித்து அறிந்திருந்தால் கண்ணால் பார்ப்பதற்கு மட்டுமல்ல வேறு முறைகளிலும் மாதத் துவக்கத்தை அறிய முடியும் என்பதற்கு நபி(ஸல்) அவர்களே வழிகாட்டி இருப்பதை அறிய முடியும். பிறையைப் புறக்கண்ணால் பார்ப்பது பர்ழோ, சுன்னத்தோ அல்ல. இம்மூட முல்லாக்கள் சொல்வது போல் இபாதத்தோ, மார்க்க வழிபாட்டுக்கு உட்பட்டதோ அல்ல.

மாதக் கடைசியில் மேற்கில் மறையும் பிறையைக் கண்ணால் பார்த்து மாதத்தைத் துவங்க வேண்டும், மாதக் கடைசியில் மட்டுமே பிறையைப் பார்க்க வேண்டும் என்று ததஜ நவீன மத்ஹப் இமாம்(?) பொய்யன் பீ.ஜை. மற்றும் ஒட்டுமொத்த மூளை வரண்ட மவ்லவிகளும் நபி(ஸல்) அவர்களே கட்டளையிட்டதாகக் கூறுவது அண்டப்புளுகாகும். அவர்கள் கூறுவது உண்மை என்றால் அவற்றிற்குரிய நேரடி ஹதீஃதை காட்டட்டும். அன்றைய நிலையில் தினசரி பிறைகளைப் பார்த்து வரக் கட்டளையிட்டார்களே, அல்லாமல் மாத இறுதியில் மட்டும் பார்க்கக் கட்டளையிடவில்லை.

பிறையைப் புறக்கண்ணால் பார்ப்பது இபாதத் என்றால் சூரியனைக் கண்ணால் பார்த்து நேரம் அறிந்து தொழுவதும் இபாதத் என அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். 22:27 இறைக் கட்டளைப்படி ஹஜ்ஜுக்கு ஒட்டகத்தில்தான் செல்ல வேண்டும். வெளியூரில் ஒருவர் இறந்து விட்டால் ஆள் நேரில் வந்து சொன்ன பின்னர்தான் ஏற்கவேண்டும். தொலைபேசித் தகவலை ஏற்கக் கூடாது. இன்று இப்புரோகிதர்கள் இப்படியா விதண்டாவாதம் செய்கிறார்கள். இல்லையே! ஆனால் அன்று புதிய கண்டு பிடிப்பின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இப்படி விதண்டாவாதம் செய்யத்தான் செய்தார்கள். காலம்தான் அவர்களை மாற்றியது. அவர்கள் மாறவில்லை. 7:146 குர்ஆன் வசனம் இம்மவ்லவிகளின் கேடுகெட்ட நிலையை அம்பலப்படுத்துகிறது.

உண்மையை-நேர்வழியை உளமாற ஏற்கும் நற்குணத்தை பெருமை பேசும் இம்மவ்லவிகளிடம் பார்க்கவே முடியாது. காரணம் அவர்கள் ஒரே நேர்வழி மார்க்கத்தை பல கோணல் வழிகள் மதங்கள், இயக்கங்கள் ஆக்கி கொடிய ஹராமான வழியில் வயிறு வளர்ப்பதால் அவர்கள் நேர்வழி வர வாய்ப்பு அரிது. (பார்க்க: 2:174,3:187,7:146,36:21)

எனவே அனைத்துப் பிரிவுகளின், இயக்கங்களின் ஒட்டுமொத்த மவ்லவிகளும் பிறையைப் புறக்கண்ணால் பார்த்து மட்டுமே மூன்றாம் பிறையை முதல் பிறையாக அதாவது யூதமதக் கலாச்சாரத்தை முஸ்லிம்களிடையே புகுத்தி வயிறு வளர்க்கும் இம்மவ்லவிகள் வானத்தின் கீழுள்ள படைப்புகளிலேயே ஆகக் கேடுகெட்டப் பாடைப்புகள் என்று விளங்கி அவர்களின் உடும்புப் பிடியிலிருந்து விடுபடுபவர்களே நேர்வழி நடந்து சுவர்க்கம் புக முடியும். (பார்க்க: 7:175-179,45:23,47:25,2:159-162)

எண்ணற்ற குர்ஆன் வசனங்கள், ஹதீஃத்களின் தெளிவின்படி பிறையைப் புறக்கண்ணால் பார்க்காமல், துல்லிய கணக்கின்படி (மூட முல்லா புரோகிதர் சொல்வது போல் கணிப்பின்படி அல்ல) மாதத் துவக்கத்தை அறிவதும், நோன்பைத் தீர்மானிப்பதும் மார்க்கத்திற்கு உட்பட்டதேயாகும். பித்அத் அல்லவே அல்ல.

**ஐயம் :** மேலும் பிறை மறைக்கப்பட்டால் என்ற வாசகம் பல ஹதீஃத்களில் வருகிறது. ஆனால் நீங்கள் (பிறையை) கணக்கிட்டு சொல்லும்போது அந்த வாசகத்திற்கு மதிப்பே இல்லாமல் போகிறதே! இது சரியா? விளக்கவும். M.J.சாதிக், காரமடை, கோவை.

**தெளிவு :** மேக மூட்டத்தால் மறைக்கப்படுவதை அந்த ஹதீஃத்கள் கூறவில்லை. பெரும் மழை காரணமாகச் சமீபத்தில் சில நாட்கள் சூரியன் மறைக் கப்பட்டிருந்தது. அதனால் சூரிய, சந்திர சுழற்சிகளுக்கும் மேகம் மூட்டத்திற்கும் சம்பந்தமே இல்லை என்பதை உறுதியாக அறியலாம்.

ஆனால் இயற்கையான சந்திரச் சுழற்சியின்படி மாதத்தின் இறுதிநாள் அதாவது 36:39 இறைவாக்

நபி(ஸல்) அவர்களைவிட நாங்களே விளக்கும் ஆற்றல் மிக்கவர்கள் என அகந்தை பேசுகிறவர்களே!

குக் கூறும் "உர்ஜூனில் கதீம்" என்ற கண்ணுக்குத் தெரியும் கடைசிப் பிறைக்கு அடுத்த நாள் பிறை மறைக்கப்பட்டிருக்கும் ஒரு நாள் மாதா மாதம் நிச்சயம் உண்டு. அதையே விஞ்ஞானிகள் புதிய பிறை *(New Moon)* என்கின்றனர். இந்துக்கள் அமாவாசை என்கின்றனர். ஆனால் சங்கமம் *(Conjunction)* இடம் பெறும் அந்த நாளில் முடியும் மாதத்தின் இறுதிப் பகுதியும், ஆரம்பிக்கும் மாதத்தின் ஆரம்பப் பகுதியும் கலந்திருப்பதால் அதை முழு நாளாக, அதாவது மாதத்தின் முழு நாளாகக் கொள்ள முடியாது. அதனால் சங்கமம் *(Conjunction)* இடம் பெறும் நாளை கழியும் மாதத்துடன் சேர்த்து விட்டு அதற்கடுத்த நாள் பஜ்ரிலிருந்து மாதத்தை ஆரம்பிப்பதே நபி (ஸல்) அவர் காட்டித் தந்த வழியாகும். இதையே பிறை மறைக்கப்பட்டால் அதை முடியும் மாதத்துடன் இணைத்து மாதத்தைப் பூர்த்தி செய்யச் சொல்லும் நபி(ஸல்) அவர்களின் கட்டளை உறுதிப்படுத்துகிறது.

**ஐயம் :** மேலும் 2 சாட்சி (பிறையை பார்த்து) சொன்னால் நோன்பு பிடிக்கலாம், விடலாம் என்று (அஹமத் :18137) ஹதீஃதில் உள்ளது. ஆனால் உங்கள் கணக்கீட்டு அடிப்படை விஷயத்தில் சாட்சி சொல்ல வேண்டிய அவசியமே இல்லாமல் போகிறதே! இது சரியா? M.J.சாதிக், காரமடை, கோவை

**தெளிவு :** அன்று நபி(ஸல்) அவர்களது காலத்தில் சூரிய, சந்திர சுழற்சியின் துல்லியக் கணக்கிடும் முறையோ, அதைப் பதிவு செய்து வைக்கும் முறையோ இருக்கவில்லை. இதைத்தான் நபி(ஸல்) அவர்கள் "லா நக்துபு வலா நஹ்ஸுபு" என்று கூறியுள்ளார்கள். அதனால் சந்திரனின் சுழற்சியை அன்றாடம் பார்த்து வரும் கட்டாயம் இருந்தது. கண்ணுக்குத் தெரியும் இறுதிப் பிறையும் (உர்ஜூனில் கதீம்) முதல் பிறையும் மிகமிகச் சிறியதாக இருப்பதாலும் குறுகிய நேரத்தில் மறைந்து விடுவதாலும், பலர் பார்க்கும் நிலை இல்லை. பார்ப்பவர் பலரை அழைத்துக் காட்டி உறுதிப்படுத்தும் நிலையும் அன்று இல்லை. அவர் சொல்வது உண்மையா? பொய்யா? என்பதை உறுதிப்படுத்த வேறு வழியே அன்று இல்லை. அதனால்தான் இந்த இடத்தில் சாட்சி தேவைப்படுகிறது. பொதுவாகப் பலர் அறிய வாய்ப்பில்லாத இடங்களில் இரு சாட்சிகளை கேட்கும் நிலை இன்றும் நடைமுறையிலுள்ளது. ஆனால் இன்று கணினியும் *(Computer)* அதைக் கொண்டு சந்திர சுழற்சியின் கணக்கிடும் முறையும் நடைமுறைக்கு வந்துவிட்டது. அந்தக் கணக்கின்படி 50 ஆண்டுகள் நூறு ஆண்டுகளுக்குப் பின் இடம் பெறும் சூரிய கிரகணம், சந்திர கிரகணம் இவற்றை இன்றே கணக்கிட்டு எழுதி வைப்பதையும் அவை 100க்கு 100% மிகச் சரியாக இடம் பெறுவதையும் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். எனவே கணக்கிடும் முறை கண்டுபிடிக்கப்பட்ட பின் 2 சாட்சி என்ற அன்றைய நிலை இன்று தேவை யற்றதாகப் போய்விட்டது. இது இபாதத்திற்கு உட்பட்டதும் அல்ல.

**ஐயம் :** கப்ரு(தர்கா) வழிபாடு செய்யும் முஸ்லிம்கள் மனம் திருந்தி வரமாட்டார் என்று நீங்கள் ஜனவரி 2015, பக்.15ல் எழுதி உள்ளீர்களே! இது சரியா? M.J.சாதிக், காரமடை, கோவை

**தெளிவு :** ஜனவரி 2015, பக்.15ன் முதல் காலம் இறுதியில் "இந்தக் கொடிய ஷிர்க்கான செயலை நன்மை, புண்ணியம் என்ற மூட நம்பிக்கையில் (பார்க்க. 18:103,104) செய்து வருவதால் அவர்கள் திருந்துவதற்கு வாய்ப்பு மிகமிகக் குறைவு" என்றும் அடுத்த காலம் இறுதியில் "அவர்களின் பக்தர்களோ கபுரு வழிபாடுகளை நன்மை தரும் புண்ணியமான செயல் என்ற குருட்டு நம்பிக்கையில் இருப்பதால் அவர்கள் மனம் வருந்தி, திருந்தி நேர்வழிக்கு வர வாய்ப்பே இல்லை" என்றே எழுதி இருக்கிறோம். நீங்கள் எழுதி இருப்பது "கப்ரு(தர்ஹா) வழிபாடு செய்யும் முஸ்லிம்கள் மனம் திருந்தி வரமாட்டார்" என்று நாம் எழுதி இருப்பதாகக் கூறியுள்ளீர். அப்படி நாம் எழுதவில்லை.

அதுவும் அதே 15-ம் பக்கத்தில் ஷிர்க்கின் கொடிய நிலை பற்றி எண்ணற்ற குர்ஆன் வசனங்களின் அத்தியாயம், வசனம் எண்களை எடுத்தெழுதியே இவ்வாறு எழுதியுள்ளோம். இந்த குர்ஆன் வசனங்கள் அனைத்தையும் சிரமம் பாராமல் குர்ஆனை எடுத்து நேரடியாகப் படித்து விளங்கியவர்களுக்கு இந்த சந்தேகம் எழ வாய்ப்பே இல்லை. நாம் 1987லிலிருந்து தெளிவாக எழுதி வருகிறோம். அந்நஜாத்தையோ, எம்மையோ தக்லீது செய்யாதீர்கள். அந்நஜாத்தில் வரும் குர்ஆன் வசனங்களை நேரடியாக குர்ஆனில் பார்த்து அதன்படி நடப்பவர்களே நேர்வழி நடக்க முடியும் என்று திட்டமாகக் கூறி வருகிறோம். ஆனால் பலரிடம் உடனுக்குடன் குர்ஆனை எடுத்து நேரடியாக குறிப்பிட்டுள்ள அத்தியாயம், வசன எண்களைப் புரட்டிப் படிக்கும் பழக்கம் இல்லை. அப்படிப்பட்டவர்கள் நேர்வழியை அடைவது கடினம்தான். (பார்க்க : 29:69)

நபி(ஸல்) அவர்களை வளர்த்து ஆளாக்கியவர், தாருந்நத்வா உலமாக்களிடமிருந்தும், அவர்களைக் கண்மூடிப் பின்பற்றிய குறைஷ் காஃபிர்களிடமிருந்தும், அல்லாஹ்வுக்குப் பிறகு நபி(ஸல்) அவர்களைக் காப்பாற்றியவர், அதனால் கொடுந் துன்பங்களை அனுபவித்தவர், மரணம் வரை ஈமான் கொள்ள முடிந்ததா? இல்லையே! காரணம் என்ன? நபி(ஸல்) அவர்கள் தனது வளர்ப்புத் தந்தையின் நேர்வழிக்காக அல்லாஹ்விடம் அழுது மன்றாடிப் பலமுறை துஆ செய்தும் அது நிராகரிக்கப்படக் காரணம் என்ன? குர்ஆன் 28:56 இறைவாக்கை மீண்டும் மீண்டும் படித்துப் பார்த்து விளங்க முற்படுங்கள். அதன் இறுதிப் பகுதியில் "நேர்வழி பெறுகிறவர்களை அவனே நன்கறிவான்" என்று இருப்பதை மீண்டும் மீண்டும் படித்து உணர்வு பெறுங்கள்!

**2:186, 7:3, 33:36,66,67,68, 50:16 இறைக் கட்டளைகள்படி மவ்லவிகள் அல்லாஹ்வுக்கும்**

ஆம்! அபூதாலிபுக்குத் தனது முன்னோர்கள் மீது இருந்த பக்தியும், அன்றைய உலமாக்கள் சபை ஆலிம்கள் மீதும், அதன் தலைவன் அபுல்ஹிக்கம்–அறிவின் தந்தை என்று அன்றைய குறைஷ்களால் ஏற்றிப் போற்றப்பட்டவனுமான அபூஜஹ்லீ மீதும் இருந்த அதீதப் பற்றும், பாசமும், நம்பிக்கையுமே அவர் நம்பிக்கைக் கொள்ளத் தடையாக இருந்தன. அதுபோல் இன்றும் 2:186 இறைக் கட்டளைப்படி அல்லாஹ் மீது வைக்க வேண்டிய நம்பிக்கையை மார்க்கத்தைப் பிழைப்பாகக் கொண்ட இப்புரோகி தர்களான மவ்லவிகள் மீது வைத்து, 3:103 இறைக் கட்டளைப்படி பிரியாமல் ஒரே ஜமாஅத்தாக குர் ஆனை பற்றிப் பிடிக்காமல், இம்மவ்லவிகளை நம்பி அவர்கள் சொல்வதை வேதவாக்காகக் கொண்டு, அவர்கள் பின்னால் கண்மூடிச் செல்பவர்களுக்கு நேர்வழி கிடைக்குமா சிந்தியுங்கள்.

**ஐயம் :** கவிதை பாடக்கூடாது என்று (36:69) அல் லாஹ் குர்ஆனில் கூறுகிறான், ஆனால் சில ஹதீஃத் களில் கவிதை பாடியதாக செய்திகள் உள்ளதே! இதற்கு விளக்கம் தரவும். (கவிதை பாடுவது கூடாது ஹதீஸ் புகாரி : 61541, முஸ்லிம் 4191)

ஹஸ்ஸான்(ரழி) அவர்கள் கவிதை பாடியதாக முஸ்லிம்:4545, ஹதீஃதிலும்/ஹஸ்ஸான்(ரழி) அவர் களை ஜிப்ரில் பலப்படுத்த வேண்டி நபி(ஸல்) அவர் கள் துஆ செய்ததாக புகாரி : 453 ஹதீஃதிலும், கஃபு இப்னு ஜுஹைர்(ரழி) அவர்கள் பள்ளியில் உட் கார்ந்து கவிதை பாடியதாக ஹாகிம்:6555 ஹதீஃதி லும் நபி(ஸல்) அவர்களே பள்ளியில் ஒரு மேடையை அமைத்து கொடுத்து அதில் ஏறி நின்று ஹஸ்ஸான் (ரழி) அவர்கள் நபியை புகழ்ந்துபாடிய தாக திர்மிதி : 2773, ஹதீஃதிலும் மேலும் அபூ ஹுரைரா(ரழி) அவர்கள் அறிவிக்கும் புகாரி:3212 ஹதீஃதிலும், கவிதைப் பாடுவதை கூடும் என்ற அடிப்படையில் இத்தனை ஹதீஃத்கள் உள்ளதே! இது குர்ஆனுக்கு முரண்படுவது போல் தெரிகிறதே! இதை எப்படி விளங்கி கொள்வது; விளக்கம் தரவும்.

M.J.சாதிக், காரமடை, கோவை

**தெளிவு :** அல்குர்ஆன் அஷ்ஷுஅரா 26:221லிருந்து 226 வரை நீங்களே படித்துப் பாருங்கள். கவிதைகள் பற்றியும், கவிஞர்களின் இழிநிலை பற்றியும் நீங் களே அறிந்து கொள்ள முடியும். 36:69 இறைவாக் கில் "(நம்முடைய தூதராகிய) அவருக்கு நாம் கவிதையைக் கற்றுக் கொடுக்கவில்லை. அது அவ ருக்குத் தேவையானதும் அல்ல..." என்று நேரடியா கக் கூறி இருப்பதன் மூலம் மார்க்கத்திற்கும் கவி தைக்கும் சம்பந்தமே இல்லை. யாரும் கவிதைகள் மூலம் மார்க்கத்தை எளிதாகப் போதிக்க முடியும் என்று நம்பினால் அவர்கள் நேர்வழியில் இல்லை என்பதை உணர முடியும். மேலும் கவிஞர்கள் வீணர்களும் பொய்யர்களும் ஆவார்கள். மேலும் கவிதைகளை விரும்பி கவிஞர்களை நேசித்து அவர்கள் பின்னால் செல்பவர்களும் வீணர்களே, கோணல் வழி செல்பவர்களே என்பதை 26:221-226 இறைவாக்குகள் உறுதிப்படுத்துகின்றன. கவிதைக் குப் பொய் அழகு என்பது கவிஞர்களே ஒப்புக் கொள்ளும் உண்மை. எனவே மார்க்கத்தில் கவிதைக்கு இடம் அறவே இல்லை.

ஆக மார்க்க அடிப்படையில் நேர்வழியை மக்க ளுக்கு எடுத்துச் சொல்ல கவிதைகள் கூடவே கூடாது என்பதை மேற்கண்ட குர்ஆன் வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன.

அப்படியானால் சில சந்தர்ப்பங்களில் கவிதை பாடப் பட்டுள்ளதாக சில ஹதீஃத்கள் கூறுகின்ற னவே அதன் பொருள் என்ன? என்பதே உங்களின் சந்தேகம். எந்தப் பிரச்சனை என்றாலும் குர்ஆன், ஹதீஃதில் விளக்கம் இல்லாமல் இல்லை, மனிதர் களில் எவரும் மேல் விளக்கம், சுய விளக்கம் (2:159, 33:36) கொடுக்கும் அவசியமே இல்லவே இல்லை என்பதை ஒவ்வொரு ஆணும், பெண்ணும் விளங்கிச் செயல்பட்டாலன்றி அவர்கள் நேர்வழி பெற முடி யாது. நீங்கள் கூறும் கவிகள் எந்த அடிப்படையில் பாடப்பட்டன என்பதை 26:227 இறைவாக்குத் திட்டமாகக் கூறுகிறது. அல்லாஹ் இறக்கியருளிய ஒரே சத்திய மார்க்கத்தை ஏற்று நற்செயல்கள் செய்து, அதையே மக்களுக்கு எடுத்துரைப்பவர் களை எதிர்த்து, இழித்து, பழித்துக் கவிபாடப் பட் டால் அதற்குப் பகரமாக அதை எதிர்த்துக் கவி மூலம் பதில் அளிக்க அல்லாஹ் அனுமதி அளித்துள் ளான். அந்த அடிப்படையில் நபி(ஸல்) அவர்களை எதிர்த்து, பழித்து தாருந்நத்வா உலமாக்கள் கவி பாடிய போது, நபி(ஸல்) அவர்கள் ஹஸ்ஸான் இப்னு தாபித்(ரழி) அவர்கள் மூலம் எதிர் கவிகள் பாடவைத்தார்கள். அதேபோல் ஹன்தக் யுத்த களத்தில் பெரும் சிரமத்துடன் அகழ் தோண்டிய போதும், கொடும் வெயிலில் சுடு மணலில் பெரும் சிரமத்துடன் பிரயாணம் செய்த போதும், சிரமங் களை மறக்க சில கவிகள் பாடியதற்கே ஆதாரம் கிடைக்கிறது. ஆனால் இவற்றை ஆதாரமாகக் கொண்டு மார்க்க அடிப்படையில் கவிதைகள் மூலம் மக்களுக்கு மார்க்கத்தை அதாவது நேர் வழியை எடுத்துச் சொல்வது நேர்வழி அல்ல, வழி கேடே என்பதே குர்ஆன் சொல்லும் தெளிவாகும்.

மேலும் ஆதாரபூர்வமான ஹதீஃத்கள் ஒரு போதும் குர்ஆனுக்கு முரண்படா, சில மூளை வரண்ட முல்லாக்களின் அற்பமான அறிவில் (17:85) அப்படித் தோன்றுவது ஆச்சரியமே அல்லவே. தாஃகூத்களான மவ்லவிகளுக்கு ஷைத்தான் அப் படித் தோன்றச் செய்து அவர்களையும் வழி கெடுத்து நரகில் தள்ளுகிறான். அவர்கள் பின்னால் கண்மூடிச் செல்பவர்களையும் நரகில் தள்ளுகிறான்.

**ஐயம்:** இயக்கப் பள்ளிகள் இருந்தும் ஷாஃபி மத்ஹபைப் பின்பற்றும் பள்ளிக்குத்தான் பெரும் பாலும் செல்கிறேன். ஃபஜ்ரில் இமாம் குனூத் ஓதும் நிலையில் நான் ஓதுவதில்லை. இந்நிலையில் இமாமைப் பின்பற்றவில்லையே என்று மனசாட்சி உறுத்தும். இது சரியா? தவறா? தங்களின் பதில்

அடியானுக்கும் இடையில் தரகர்களாக–புரோகிதர்களாகப் புகுவது கொடிய ஹராமாகும்–வழிகேடாகும்!

என்ன? வானர் நதீர்.

**தெளிவு :** இதோ குர்ஆன் கூறுகிறது.

*அல்லாஹ்வுடைய பள்ளிவாசல்களில் அல்லாஹ்வின் பெயரைச் சொல்லித் துதிப்பதைத் தடுத்து அவற்றைப் பாழாக்க முயல்பவனைவிட பெரிய கொடுமைக்காரன் யாராக இருக்க முடியும்....(2:214)*

*நிச்சயமாகப் பள்ளிவாசல்கள் அல்லாஹ்வுக்காகவே இருக்கின்றன. எனவே (அவற்றில்) அல்லாஹ்வுடன் (வேறு) எவரையும் அழைக்காதீர்கள். (72:18)*

ஆக உலகில் இருக்கும் பள்ளிவாசல்கள், இனிமேல் கட்டப்படும் பள்ளிவாசல்கள் அனைத்தும் அல்லாஹ்வுக்கு மட்டுமே சொந்தம். அப்பள்ளிகளில் குர்ஆனில், ஆதாரமான ஹதீஃதில் இருப்பவை மட்டுமே மார்க்கமாகச் சொல்லப்பட வேண்டும். ஆனால் இன்று முஸ்லிம்கள் என்ன செய்கிறார்கள். ஒவ்வொரு பிரிவினைவாதிகளும் இது சுன்னத் ஜமாஅத் பள்ளி, ஹனஃபி பள்ளி, ஷாஃபி பள்ளி, மாலிக் பள்ளி, ஹன்பலி பள்ளி, அஹ்ல ஹதீஃத் பள்ளி, ஜாக் பள்ளி, ததஜ பள்ளி, இதஜ பள்ளி, முஜாஹித் பள்ளி என விதவிதமாகப் பள்ளிகளைச் சொந்தம் கொண்டாடுவதோடு, குர்ஆனுக்கும், ஹதீஃதுக்கும் முரண்பட்ட கொள்கைகளை மட்டுமே செயல்படுத்துகின்றனர். குர்ஆனையும், ஹதீஃதையும் மட்டுமே மார்க்கமாகச் சொல்ல இப் பள்ளிகளில் அறவே அனுமதி இல்லை.

இஸ்லாம் என்ன சொல்கிறது? உலகில் ஒரு மனிதனுக்குரிய இடத்தைப் பிரிதொருவன் ஆக்கிரமித்து வைத்துக் கொண்டு உரிமை கொண்டாடினால் அவன் எப்படிப்பட்ட பரம அயோக்கியன், பொய்யன், நாளை மறுமையில் அடையப் போகும் கொடும் தண்டனை என்ன என்பதை எல்லாம் தெளிவாகப் பட்டியலிட்டுக் காட்டுகிறது.

இப்போது சிந்தியுங்கள். அவனைப் போன்றதொரு மனிதனின் இடத்தையே அபகரித்துச் சொந்தம் கொண்டாடும் ஒருவனுக்கே இந்தளவு கடுமையான தண்டனை நாளை மறுமையில் கிடைக்கும் என்றால், அல்லாஹ்வுக்கு மட்டுமே சொந்தமான பள்ளிகளை இப்பிரிவினைவாதிகள் அபகரித்து, சொந்தம் கொண்டாடுவதுடன், குர்ஆன், ஹதீஃத் போதனைகளை அங்கு கேட்க விடாமல் தடுப்பவர்கள் யாராக இருக்க முடியும்? இது சுன்னத் ஜமாஅத் பள்ளி, இமாம்கள் சொன்னதை மட்டுமே சொல்ல அனுமதிப்போம். குர்ஆன் ஹதீஃதை மட்டும் சொல்ல அனுமதிக்க மாட்டோம் என்று அடம் பிடிப்பவர்கள் நாளை மறுமையில் எந்த நரகில் கிடந்து வெந்து கரியாகப் போகிறார்கள் என்பதை அல்லாஹ்வே அறிவான்.

இங்கு சுன்னத் ஜமாஅத்தினரை விட தரம் தாழ்ந்து போய்விட்டது நவீன மத்ஹபான ததஜ மத்ஹப்; அவர்கள் பள்ளியில் பாங்கு சொல்வதிலிருந்து, தொழ வைப்பதிலிருந்து, பயான் செய்வதிலிருந்து ததஜ வினரைத் தவிர்த்து வேறு யாருக்கும் அனுமதி இல்லை. மேலும் ஒவ்வொரு மஹல்லாவிலும் அங்குள்ள மக்களைப் பிரித்து சமுதாய ஒற்றுமையைக் குலைத்து அற்ப உலகியல் ஆதாயம் அடையும் தீய நோக்குடன் கட்டப்பட்டவையே ததஜ பள்ளிகள், அவற்றை மஸ்ஜிதன் ழிரார (பார்க்க : 9:107) பட்டியலிலேயே சேர்க்க முடியும். ஷிர்க்கிலேயே ஆகக் கொடிய ஷிர்க்கில் மூழ்கி இருப்பது ததஜவினரே. 9:17 இறைவாக்குப் படி அவர்களுக்கு அல்லாஹ்வின் பள்ளிகளை நிர்வகிக்கும் தகுதி அறவே இல்லை. மத்ஹபினரை ஒருக்கால் அல்லாஹ் மன்னித்தாலும் ததஜவினரை அல்லாஹ் மன்னிப்பான் என்பது சந்தேகமே! காரணம் என்ன தெரியுமா?

இந்தியாவில் மத்ஹபு பள்ளிகள் கட்டிய காலத்தில் அன்றைய முஸ்லிம்களுக்கு குர்ஆன், ஹதீஃதை தங்களின் தாய் மொழியில் படித்து அறியும் வாய்ப்பு அறவே இல்லை. இவர்களின் முன்னோர்களான புரோகித முல்லாக்கள் குர்ஆனில் இருக்கிறது. ஹதீஃதிலிருக்கிறது என்று புருடா விட்டதை ஏற்று அவற்றை வேதவாக்காகக் கொண்டு செயல்படும் கட்டாயத்தில் இருந்தனர். வேறு வழி இருக்கவில்லை. முன்னோர்களைப் பின்பற்றும் மூட நம்பிக்கையில் இன்றைய மத்ஹபினர் அம்மத்ஹபுகளைப் பிடித்துத் தொங்குகின்றனர்.

*அதற்கு மாறாக பீ.ஜைக்குப் பிடித்த கேடு என்ன? 1986 ஏப்ரலிலிருந்து 1987 ஜூன் வரை நம்மோடு இருந்த பீ.ஜை. இஸ்லாம் அல்லாத இயக்கம் எங்களுக்கு இல்லை. ஆலிம்-அவாம் வேறுபாடு இஸ்லாத்தில் இல்லை. ஒவ்வொரு ஆணும், பெண்ணும் குர்ஆன், ஹதீஃதை சுயமாக வளங்கி அதன்படி நடக்க வேண்டும். நாங்கள் புரோகிதர்களை சப்ளை செய்வதில்லை. மார்க்கப் பணிக்குக் கூலி கூடாது (ஹராம்) என்று 1984லிருந்து இன்று 2015 வரை எவ்வித மாற்றமும் இல்லாமல் நாம் சொல்லுவதை ஏற்று அவரும் சொல்லிக் கொண்டிருந்தவர்தானே, எழுதிக் கொண்டிருந்தவர்தானே. அன்று ஒற்றுமையாகச் செயல்பட்ட அந்த 15 மாதங்களிலேயே தமிழகத்தில் ஐந்து சுன்னத் ஜமாஅத் பள்ளிகள் குர்ஆன், ஹதீஃத் வழிக்கு வரத்தனே செய்தன. அதே போல் பீ.ஜை ஷைத்தானின் பிடியில் சிக்காமல் நம்மோடு இருந்த அதே ஒற்றுமையை நிலை நாட்டியிருந்தால் கடந்த 30 ஆண்டுகளில் எவ்வளவு பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கும்? எத்தனை சு.ஜ. பள்ளிகள் குர்ஆன், ஹதீஃத் வழிக்கு வந்திருக்கும்! சிந்தியுங்கள்?*

*7:175-179, 27:14, 45:23, 47:25 இறைவாக்குகள் சொல்வது போல் குர்ஆன், ஹதீஃதை நன்கு தெரிந்த பின், மனோ இச்சைக்கு அடிமைப்பட்டு ஷைத்தானுக்குப் பின்னால் போய் கடந்த 30 ஆண்டுகளில் எத்தனை அந்தர் பல்டிகள் அடித்துள்ளார். இடத்திற்கேற்றவாறு நிறம் மாறும் பச்சோந்தியாகி விட்டார், எத்தனை கொள்கை மாற்றங்கள் செய்து கொள்கையற்ற கோமாளியாக ஆகிவிட்டார். அவர் 1986 அந்நஜாத் திலிருந்து இன்று 2015 வரை*

**2:186, 7:3, 18:102-106 வசனங்கள்படி மவ்லவி புரோகிதர்கள் சட்ட விரோதமாக கொல்லைப்புற**

எத்தனை பத்திரிகை களில் எழுதியுள்ளாரோ அவை அத்தனையையும் படித்துப் பாருங்கள்; அவர் கொள்கையற்ற கோமாளி தான் என்பது தெளிவாகப் புரியும். அவர் ஷைத்தான் பின்னால்தான் சென்று கொண்டிருக்கிறார் என்பது தெளிவாகப் புரியும். அவர் பின்னால் சேர்ந்துள்ள தறுதலைப் பெருங் கூட்டத்தைக் கண்டு மயங்குகிறார். தஜ்ஜால் பின்னாலும் பெருங் கூட்டம் சேரும் என்பதை ஷைத்தான் அவருக்கு மறக்கடித்து விட்டான்.

இந்தளவு அவரைப் பற்றிய கேடுகளை விவரிக்கும் கட்டாயம் ஏன் தெரியுமா? அவரும் அவரது தறுதலைக் கூட்டமும் மட்டும்தான் நேர்வழி நடப்பதாகவும், அவரின் ததஜ பள்ளிகள் மட்டும்தான் குர்ஆன், ஹதீஃத்படி நடக்கும் பள்ளிகள், ஏனைய பள்ளிகள் அனைத்தும் ஷிர்க், குஃப்ர் நிறைந்த பள்ளிகள் என்றும் அப்பள்ளிகளில் இமாம்கள் பின்னால் தொழுவது ஹராம். அத்தொழுகை கூடாது என்று ஃபத்வா கொடுத்து சமுதாயத்தை பிளவுபடுத்துவதால்தான் இந்த விவரங்களை தெளிவுபடுத்தும் கட்டாயம் ஏற்படுகிறது.

1985 வரை கிணற்றுத் தவளையாக இருந்த பொய்யன் பீ.ஜை. அந்நஜாத் மூலம் பிரபல்யமாகி, அந்தப் பிரபல்யத்தை முதலீடாகக் கொண்டு, அல்குர்ஆனும், ஹதீஃதும் மட்டும்தான் நேர்வழி, வஹீ மட்டுமே மார்க்கம் என்று வாயளவில் பிதற்றிக் கொண்டு செயல்களில் குர்ஆனுக்கும், ஹதீஃதுக்கும் முரணான கருத்துக்களை அவரது கண்மூடி பக்தர்களுக்குப் போதித்து அவர்களை வழிகெடுத்து நரகில் தள்ள முற்படுவதால் அவரை அடையாளம் காட்டும் கட்டாயம் ஏற்படுகிறது.

பொய்யன் பீ.ஜையின் துர்போதனையால் ஏற்பட்ட விளைவுதான் உங்களின் மனசாட்சி உறுத்தல். குர்ஆன், ஹதீஃத் போதனையை ஏற்று நேர்வழி நடக்கும் முஸ்லிம்களுக்கு உலகில் காணப்படும் பள்ளிகள் அனைத்தும் அல்லாஹ்வுடைய பள்ளிகளே! அப்பள்ளிகளில் எப்பள்ளியில் தொழுதாலும் அவர்களின் தொழுகை கூடும். அந்தப் பள்ளியின் இமாம் தர்காக்களுக்குச் சென்று அங்குள்ள கபுருக்கு சுஜுது செய்பவராக இருந்தாலும், மவ்லூது, ராத்திபு என ஓதுபவராக இருந்தாலும், அவரது தொழுகை ஏற்கப்படாமல் அவரது முகத்திலேயே எறியப்பட்டாலும், அவரைப் பின்பற்றி தொழுபவர்கள் சரியாகத் தொழுதிருந்தால் அத் தொழுகைக்கு எவ்விதப் பாதகமுமில்லை.

அவர் எப்படிப்பட்ட ஷிர்க்கான செயல்களை செய்து கொண்டிருந்தாலும், பள்ளிக்கு வந்து ஒளூ செய்கிறார். கிபுலாவை நோக்கி நிற்கிறார். அல்லாஹு அப்கபர் என்றே தக்பீர் காட்டுகிறார். தொழுகைக்கு உட்பட்டவற்றை மட்டுமே செய்கிறார். அவர் செய்யும் இந்த அழகிய செயல்களை ஓர் உண்மை முஸ்லிம் பின்பற்றுவதை மார்க்கம் தடை செய்யுமா? இல்லையே.

39:17,18 குர்ஆன் வசனங்களைப் படித்துப் பாருங்கள். இப்படிப்பட்ட நற்செயலை கேட்பதை, பின்பற்றுவதை தடை செய்கிறவர்கள் தாஃகூத்கள் – மனித ஷைத்தான்கள், அவர்களின் அப்பேச்சை கேட்டு அதன்படி நடப்பவர்கள் அதாவது மற்றவர்களின் பேச்சுக்களை கேட்க, எழுத்துக்களைப் படிக்க மறுப்பவர்கள் அந்த ஷைத்தான்களை வணங்குகிறார்கள். யார் அவர்களை வணங்குவதை விட்டும் விலகி, யார் நற்செயல் செய்தாலும், எழுதினாலும், சொன்னாலும் அதை எடுத்து நடப்பவர்களே அல்லாஹ்வின் நல்லடியார்கள், நேர்வழி நடப்பவர்கள், அறிவாளிகள், இறைவனின் நன்மாராயம் பெற்றவர்கள் என்று குர்ஆன் 39:17,18 இறைவாக்குகள் நெற்றிப் பொட்டில் அடித்துக் கூறுவதைப் படித்து அறியுங்கள்.

தொழ வைக்கும் இமாம்கள் சில்லறை விஷயங்களில் தவறுகள் செய்தாலும் நீங்கள் சரியாகச் செய்யுங்கள் என்பதுதான் நபி(ஸல்) அவர்களின் வழிகாட்டல். யார் நம்முடைய தொழுகையை தொழுகிறாரோ, நமது கிப்லாவை முன்னோக்குகிறாரோ, நாம் அறுத்ததைச் சாப்பிடுகிறாரோ அவர் முஸ்லிம். அவருக்கு முஸ்லிம்களுக்குரிய அனைத்து உரிமைகளும் உண்டு. அவரின் உரிமையை பறித்து அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகாதீர்கள் என்று நபி (ஸல்) நேரடியாக, தெளிவாக எச்சரித்துள்ளார்கள்.

எனவே எந்தப் பிரிவினைவாதிகள் பள்ளிகளாக இருந்தாலும் ஒரு நேர்வழி நடக்கும் முஸ்லிம் அப்பள்ளிகளுக்கு மத்தியில் பாகுபாடு காட்டாமல், பள்ளிகள் அனைத்தும் அல்லாஹ்வுக்கு மட்டுமே சொந்தம் என்ற நியதியை ஏற்று எப்பள்ளியிலும் போய் தொழலாம். அந்த இமாம் எப்படிப்பட்டக் கொள்கையில் இருந்தாலும், பெரும் ஷிர்க்கில் மூழ்கி இருந்தாலும், தொழுகையை முறைப்படி செய்வதால் அவரை பின்பற்றித் தாராளமாகத் தொழலாம். அதற்கு அல்லாஹ்வோ அவனது தூதரோ எவ்விதத் தடையும் விதிக்காத நிலையில் யார் தங்களின் சுய புராணங்களைப் புகுத்தி தடை விதிக்கிறார்களோ அவர்கள் அந்த இமாமை விட கொடிய ஷிர்க்கில் மூழ்கி இருக்கிறார்கள் என்பதையும், நாளை மறுமையில் அல்லாஹ் அந்த இமாமை விட கொடிய குற்றவாளியாக இவர்களை நிறுத்தி, அந்த இமாமுக்கு முன்னாலேயே நரகின் ஆக அடித்தட்டில் தூக்கி எறிவான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். காரணம் 42:21 இறைவாக்குச் சொல்வது போல் அல்லாஹ் விதிக்காததை விதித்து, 49:16 இறைவாக்குச் சொல்வது போல், அல்லாஹ்வுக்கு மார்க்கம் கற்றுக் கொடுக்க முற்பட்டு, அதிகாரம் பெற்ற அல்லாஹ்வே இவ்வுலகில் தீர்ப்பு அளிக்காமல், நாளை மறுமைக்கென்று ஒத்தி வைத்துள்ள தீர்ப்பளிக்கும் அதிகாரத்தைத் தன் கையில் எடுத்துத் தீர்ப்பளிக்கும் இக்கொடிய முஷ்ரிக்குகள் நாளைய நிலை மிகமிகப் பரிதாபத்திற்குரியதே. 3:128, 6:159 இறைவாக்குகள் சொல்வது போல் அல்லாஹ்வின் இறுதித் தூதருக்கே இல்லாத தீர்ப்பளிக்கும் அதிகாரம் தங்களுக்கு இருப்பதாக நம்பும் நவீன பித்அத்

இடுக்கு வழியாக திருட்டுத்தனமா புகுந்து கொண்ட திருடனிலும் கேடுகெட்ட திருடர்களாவார்கள்!

மத்ஹபான ததஜவின் இமாமும் பொய்யனுமான பீ.ஜை. எப்படிப்பட்ட வழிகேட்டில் இருக்கிறார் என்பதை அறிபவர்களே அறிவாளிகள்.

**ஐயம் :** புவி மைய சங்கமம் *(Geocentric Conjunction)* நடைபெறும் போது பூமியில் இரண்டு கிழமைகள் இருக்கும். அதனால் 24 மணி நேரங்கள் கொண்ட ஒரு நாளுக்குள் நோன்பைத் துவங்கவோ, பெரு நாளை கொண்டாடவோ முடியாது என்கிறார்களே இதன் விளக்கம் என்ன?

**தெளிவு :** ஒவ்வொரு சந்திர மாதத்தின் இறுதி நாளிலும் சூரியன், சந்திரன் மற்றும் பூமி ஆகிய முக்கோள்களும் ஒரு கோட்டில் தவறாமல் சங்கமிக்கும், அவ்வாறு சங்கமிக்கும் நிகழ்வைத்தான் புவி மைய சங்கமம் *(Geocentric Conjunction)* என்கிறோம். சங்கமம் என்ற இந்த நிகழ்வு பூமியில் ஒரேயொரு மையப் புள்ளியில் *(Geocentric Position)* தான் நடைபெறும். ஒரு மாதத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மையப் புள்ளிகளில் சங்கமம் நடைபெறாது. சங்கமம் நடைபெறும் மையப்புள்ளியின் பகுதிக்கு ஒரேயொரு தேதியும், ஒரேயொரு கிழமையும் தான் (நாள்) இருக்கும். சங்கமம் நடைபெறும் அந்த சர்வ தேச நாளைத்தான் புவி மைய சங்கம நாள் என்கிறோம். பூமியின் ஒரே மையப் புள்ளியில் நடைபெறும் நிகழ்வான இப்புவி மைய சங்கமம் என்ற அந்த சொல்லிலேயே இக்கேள்விக்குரிய விடை உள்ளது. சங்கமம் நடைபெறும் அந்த சர்வதேச நாளுக்கு, இரண்டு தேதிகள் கிடையாது என்பதை அறிந்து கொள்க. இப்போது கேள்வியை மீண்டும் படியுங்கள். புவிமைய சங்கமம் *(Geocentric Conjuction)* நடைபெறும்போது பூமியில் இரண்டு கிழமைகள் (நாட்கள்) இருக்கும் என்பது வாதம். சங்கமம் நடைபெறாத மாதத்தின் மற்ற நாட்களிலும் பூமியில் இரண்டு கிழமைகள் இருக்கத்தான் செய்யும். எனவே ஒவ்வொரு தேதிக்கும் இரண்டிரண்டு கிழமைகள் கொடுக்கலாமா என்ன? ஒவ்வொரு நாளுக்கும் (கிழமைக்கும்) குறிப்பிட்ட ஒரு தேதி மட்டும்தான் உள்ளது என்பதை மறந்துவிடக் கூடாது.

உதாரணமாக ஒரு சந்திர மாதத்தின் 30ம் தேதி வெள்ளிக்கிழமை பூமியின் ஒரு மையப் புள்ளியில் சங்கமம் நிகழ்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது வியாழக்கிழமையில் இருக்கும் நாடுகள் அனைத்திற்கும் 29வது தேதியாகத்தான் இருக்கும். அன்றி அந்த வியாழக்கிழமைக்கு 30வது தேதியோ, 28வது தேதியோ இருக்காது. அதுபோல சங்கமம் நடைபெறும் வெள்ளிக்கிழமைக்கு 30வது தேதியைத் தவிர மற்றொரு தேதி இருக்காது. அந்த வெள்ளிக்கிழமை என்ற 24 மணி நேரங்கள் கொண்ட அந்த நாளில் மட்டும்தான் ஜுமுஆ எனும் 2 ரகாஅத்துகள் கொண்ட தொழுகைத் தொழுவோம். வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகள் என்று ஒன்றுக்கு மேற்பட்ட நாட்களில் ஜுமுஆ தொழுகையை நாம் தொழ மாட்டோம். ஆக சங்கமம் நடைபெறும் போது இரண்டு கிழமைகள் (நாட்கள்) இருக்கும் என்றால், குறிப்பிட்ட அந்தந்த நாட்கள் குறிப்பிட்ட ஒவ்வொரு தேதிக்கும் உரியது. எனவே 24 மணி நேரங்கள் கொண்ட ஒரு நாளுக்குள் நோன்பைத் துவங்கவோ, பெருநாளை கொண்டாடவோ முடியாது என்பது தவறான அபத்தமான வாதமாகும். மேலும் இது திட்டமிட்டு திரித்துக் கூறுவதும் ஆகும்.

ஒரு நாளுக்கு ஒரேயொரு தேதிதான் அமைய வேண்டும் என்பது ஒரு காலண்டரின் அடிப்படையான விஷயம். இந்த அடிப்படையைத் தகர்த்து விட்டால், அவரவர்கள் பகுதிகளில் அவரவர்கள் விருப்பப்படி இரண்டு மூன்று நாட்கள் வேறுபட்டு நோன்பைத் துவங்கலாம். அல்லது பெருநாளைக் கொண்டாடலாம் என்ற தத்தமது பகுதி பிறை நிலைப்பாட்டின் மூடத் திட்டத்தால் கேட்கப்படும் கேள்வி இது. நாட்காட்டியின் சாதாரண அடிப்படையைக் கூட புரியாதவர்களுக்கு நமது எத்தகைய விளக்கங்களும் புரியப் போவதில்லை.

**ஐயம் :** ஹிஜ்ரி நாட்காட்டியை கன்ஜங்ஷன் *(Conjuction)* முலாம் பூசப்பட்ட கிரிகோரியன் நாட்காட்டி என்று விமர்சனம் செய்வது பற்றிய விளக்கம் என்ன?

**தெளிவு :** குர்ஆன் சுன்னாவின் அசைக்க முடியாத ஆதாரத்துடன், துல்லியமான விஞ்ஞானத்தின் அடிப்படையிலும் அமைந்ததே அல்லாஹ் வழங்கிய மனிதகுலத்தின் காலண்டரான சந்திர நாட்காட்டியே நமது ஹிஜ்ரி நாட்காட்டி ஆகும். இத்தகைய இஸ்லாமிய சந்திர ஹிஜ்ரி நாட்காட்டியை, ஒட்டுமொத்த மனிதர்களுக்காகவும் அல்லாஹ் வழங்கியுள்ள காலண்டரை, போப் கிரிகோரி தயாரித்த கிருஸ்தவ ஆங்கில நாட்காட்டியோடு அணுவின் முனையளவும் கூட ஒப்பிட்டுக் கூற இயலாது.

காரணம், நமது சந்திர ஹிஜ்ரி நாட்காட்டியில் நபி(ஸல்) அவர்களின் கட்டளைப்படி ஒவ்வொரு மாதங்களிலுள்ள நாட்களின் எண்ணிக்கை 29 அல்லது 30 ஆகவே உள்ளன. ஆனால் கிரிகோரியன் நாட்காட்டியின் மாதங்களிலுள்ள தேதிகளின் எண்ணிக்கை 28,29,30 மற்றும் 31 என்று பலவாறாக அமைந்துள்ளன. மேலும் இந்த கிரிகோரியன் காலண்டர் இஸ்லாம் தடுத்துள்ள நட்சத்திர இலக்கை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது. மாதங்கள் கிரேக்க தெய்வங்களின் பெயர்களை உடையவை!

மேலும் துல்லியமாகக் கணக்கிட முடியாத நான்கு ஆண்டுகளுக்கொரு முறை 1 நாளைக் கூட்டவும், 127 ஆண்டுகளுக்கு ஒருமுறை 1 நாளைக் கழிக்கவுமான குறைபாடு உடையதுதான் கிரிகோரியன் கிறித்தவ காலண்டர். அந்தக் கூருகெட்ட காலண்டரைத்தான் கூருகெட்ட ததஜ மத்ஹப் இமாம் பொய்யன் பீ.ஜையும் அவரது பக்தகோடி களும் தூக்கிப் பிடிக்கின்றனர்.

சந்திரனின் ‘அஹில்லாஹ்’ மனிதர்களுக்கு தேதி

**திருடன் மக்களின் சாமான்கள் மட்டுமே திருடுவான்; மௌலவி புரோகிதர்களோ**

களை அறிவிக்கும் *(2:189)* மற்றும் சந்திரனின் 'மனாஜிலை' வைத்து ஆண்டுகளைக் கணக்கிட வேண்டும் *(10:5)* இவை போன்ற அல்குர்ஆனின் கட்டளைகளுக்கிணங்க பிறைகளின் வடிவ நிலை களால் ஆனதே சந்திர ஹிஜ்ரி காலண்டர் தேதிகள். ஆனால் கிரிகோரியன் நாட்காட்டியின் தேதிகளுக் கும் பிறைகளின் படித்தரங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

இஸ்லாமிய சந்திர ஹிஜ்ரி காலண்டரின் மாதங் களிலுள்ள நாட்களின் எண்ணிக்கையில் எவ்வித கூட்டலும், கழித்தலும், தேவையற்றது. ஆயிரக் கணக்கான ஆண்டுகளின் கணக்கீட்டில் கூட அதன் துல்லியம் மாறாதது. ஆனால் கிரிகோரியன் நாட் காட்டியில் ஒவ்வொரு 4 வருடங்களுக்கு ஒருமுறை, லீப் நாளாக ஒரு நாளை கூடுதலாக சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இஸ்லாமிய சந்திர ஹிஜ்ரி நாட்காட்டியின் ஒவ் வொரு தேதியும் குர்ஆன் சுன்னாவின் கூற்றுக் கிணங்க ஃபஜ்ரிலிருந்து (விடியலிலிருந்து) துவங்கு கிறது. ஆனால் கிரிகோரியன் நட்காட்டியின் தேதி கள் நள்ளிரவு 12 அணிக்கு துவங்குகிறது.

இவ்வாறு சந்திர ஹிஜ்ரி நாட்காட்டிக்கும், கிறிஸ்தவ நாட்காட்டிக்கும் இடையே உள்ள வேறு பாடுகளின் பட்டியல் மிக நீளமானது. எனவே சந்திர ஹிஜ்ரி நாட்காட்டி கன்ஜங்ஷன் *(Conjuction)* முலாம் பூசப்பட்ட கிரிகோரியன் நாட்காட்டி என்ற தரம் தாழ்ந்த விமர்சனத்தின் உண்மை நிலையை நியாயமுடனும், நீதியுடனும் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

கிரிகோரியனின் கிறிஸ்தவ நாட்காட்டியைத் தூக்கிப் பிடித்து சந்திர ஹிஜ்ரி நாட்காட்டியை எப்படியேனும் மட்டம் தட்ட வேண்டும் என்ற நோக்கில் ததஜ மத்ஹப் தலைவர் பொய்யன் பீ.ஜை. பேசிய பேச்சுக்களை யாரும் மறக்க இய லாது. ஆங்கில காலண்டர் கிருஸ்தவ நாட்காட்டி அல்ல, மாறாக அது ஒரு சூரியக் காலண்டர்தான். இதைப் பின்பற்றுவது தப்பில்லை என்றார். மேலும் ஆங்கில காலண்டர் பின்பற்றுவதற்கு லேசானது, லேசானதுதான் மார்க்கம் என்றும் கூறினார். ஸஹா பாக்கள் இஸ்லாமிய ஆண்டுகளின் எண்ணிக்கை களை நபி(ஸல்) அவர்களின் ஹிஜ்ரத்திலிருந்து துவக் கியதில் எவ்வித லாஜிக்கும் இல்லை என்றார். இவ் வாறான அபத்தக் கருத்துக்களை எல்லாம் மார்க்கம் என்று போதிக்கப்பட்டு அதிலேயே பயிற்றுவிக்கப் பட்டவர்கள் யாரும் சந்திர ஹிஜ்ரி நாட்காட்டி யைப் பற்றி விமர்சிப்பதற்கு எவ்வித அருகதையும், தகுதியும், உரிமையும் இல்லாதவர்களாவர்.

'ஒரு கிழமைக்கு இரண்டு தேதிகளை இறைவன் அமைத்துள்ளான்' என்று ஆதாரமற்ற, வடிகட்டிய பொய்யைக்கூட துணிந்து சொல்பவர்களிடம் இது போன்ற தரமற்ற விமர்சனங்களைத் தவிர வேறு எவற்றை நாம் எதிர்பார்க்க முடியும்?

**ஐயம் :** அவரவருக்கு நோன்பு வரும்போதுதான் நோன்பு நோற்க வேண்டும். அவரவருக்கு பெரு நாள் வரும்போதுதான் பெருநாள் கொண்டாட வேண்டும். உதாரணமாக இந்தியாவின் வடக்கு பகுதியுள்ள ஜெய்ப்பூரையும், தெற்குப் பகுதியி லுள்ள காயல்பட்டினத்தையும் எடுத்துக் கொள் வோம். ஜெய்ப்பூருக்கும், காயல்பட்டினத்திற்கும் அட்சரேகை மாறுபட்டிருப்பதால் பிறையின் காட்சி நேரத்தில் மிகுந்தநேர வித்தியாசம் வரும், அதனால் நோன்பும், பெருநாளும் மாறுபடத்தான் செய்யும் என்கிறார்களே இதற்கு உங்கள் பதில் என்ன?

**தெளிவு :** உலக முஸ்லிம்கள் 24 மணி நேரங்கள் கொண்ட ஒரு நாளுக்குள் நோன்பைத் துவங்கிட வேண்டும் என்று நாம் கூறுவதை 'ஒரே நேரத்தில்' நோன்பை நோற்க வேண்டும் என்று நாம் கூறுவ தாக மீண்டும் மீண்டும் திரித்துக் கூறி வருகின்றனர்.

ஜெய்ப்பூரில் ஃபஜ்ரு தொழுகை தொழும் அதே மணிநேர நிமிடத்தில் காயல்பட்டினத்தில் நாம் ஃபஜ்ரு தொழுகையைத் தொழுவோமா என்றால் அதற்கு வாய்ப்பில்லை. சில நிமிட நேரங்கள் வித்தி யாசங்கள் இருக்கத்தான் செய்யும். அதைப் போல ஜெய்ப்பூரில் சூரியன் மறையும் அதே நேரத்தில் காயல்பட்டினத்தில் சூரியன் மறைவது இல்லை தான். ஆனால் மேற்படி இரண்டு ஊர்களுக்கு மிடையே நேர வித்தியாசம் இருக்குமே அல்லாமல் நாள் வித்தியாசம் என்பது இல்லை. இதற்கு ஜெய்ப்பூர் என்ன தமிழ்நாட்டிற்குள்ளேயே இத் தகைய நிமிட நேர வித்தியாசங்கள் வரத்தான் செய் யும். ஆனால் தேதி மாறுபடுவதில்லை.

அதாவது ஜெய்ப்பூருக்கும், காயல்பட்டினத்திற் கும் வெள்ளிக்கிழமை என்பது ஒரு தேதிக்குள்தான் வருகிறது. ஜெய்ப்பூருக்கும், காயல்பட்டினத்திற் கும் தனித்தனியாக இரண்டு தேதிகளில் வெள்ளிக் கிழமை வருவதில்லை. வெள்ளிக்கிழமை என்ற 24 மணி நேரங்கள் கொண்ட அந்த ஒரு நாளுக்குள் ளேயே ஜெய்ப்பூர், காயவ்பட்டினம் முஸ்லிம்கள் உட்பட உலக முஸ்லிம்கள் அனைவரும் ஜுமுஆ தொழுகையை தொழுது விடுகிறோம். இந்நிலை யில் அட்சரேகை (Latitude), பிறையின் கடைசி நேர வித்தியாசம் என்றெல்லாம் எழுதி கஷ்டமான கேள்வியை கேட்டுவிட்டதாக காண்பிப்பதில் யாருக்கும் எந்தப் பயனுமில்லை. ஒரு தீர்க்க ரேகை யில் (Longitude) அல்லது ஒருநாட்டில் உள்ள இரண்டு ஊர்கள் வடக்கு, தெற்குமாக அமைந்திருந்தால் அவற்றின் அட்சரேகையின் மதிப்பளவீடு வித்தி யாசமாக இருப்பது இயற்கையே. அவரவருக்கு நோன்பு வரும்போதுதான் நோன்பு நோற்க வேண் டும் என்று புரிந்துகொண்டு காயல்பட்டிணத்தில் ஒரு நாளிலும், ஜெய்ப்பூரில் அதற்கு அடுத்த நாளி லும் நோன்பைத் துவங்கலாம் என்று போதிப்பது ஏன் என்று கேட்கிறோம். அவரவருக்கு பெருநாள் வரும்போதுதான் பெருநாள் கொண்டாட வேண் டும் என்று கூறிக்கொண்டு மேற்படி இரு ஊர்களி

மக்களின் ஈமானையும்(இறை நம்பிக்கை) சாமான்களையும் சேர்த்தே திருடுகிறார்கள்!

லும் வெவ்வேறு நாட்களில் கொண்டாடுவது ஏன் என்றுதான் கேட்கிறோம்.

மேற்படி இரு ஊர்களுக்கும் பிறையின் காட்சி நேரத்தில் நேர வித்தியாசம் வரும் என்பதால், மேற்படி இரு ஊர்களுக்கு ஒரு நாளுக்குள் தெரியும் பிறை வெவ்வேறு தேதிகளைக் காட்டுமா? சற்று சிந்திப்பீர். நேர வித்தியாசம் என்பதையும், நாள் வித்தியாசம் என்பதையும் ஏன் இவர்களால் இன்னும் புரிந்து கொள்ள இயலவில்லை? தமிழ் நாட்டிற்குள்ளேயே வக்த்துகளில் இத்தகைய நிமிட நேர வித்தியாசங்கள் வருவதால் இவர்களின் இயக்கத் தவர்களும், இவர்களை இயக்குபவர்களும் தமிழ் நாட்டிற்குள் இரண்டு வெவ்வேறு நாட்களில் வித்தி யாசப்பட்டு பெருநாள் கொண்டாடி காட்டட்டும்.

அவரவர்களுக்கு நோன்பும், பெருநாளும் என்பதுதான் மார்க்கம் எனப் புரிந்து கொண்டதால் தான் பிறைகள் விஷயத்தில் மாநில அளவு, ஒரு நாட்டளவு மற்றும் சர்வதேசம் என்று பிறை பார்க்கும் எல்லைகளை தாங்களாகவே நிர்ணயித்துக் கொண்டு வேறுபட்டுள்ளனர்.

இன்னும் சவுதியில் தெரியும் பிறையானது, பூமியை ஒரு ரவுண்டு சுற்றி இந்தியாவுக்குள் வந்து, நம் கண்களுக்குத் தெரிய வேண்டுமானால் இருபத்து ஒன்றரை(21:30) மணி நேரம் ஆகும் என்பது தான் இவர்களது தலைவரின் பிறை நிலைப்பாடு. ஆக பிறை விஷயத்தில் சவுதி அரேபியாவை விட இந்திய நாடு, ஒரு நாள் பின்தங்கி உள்ளது என்பதே இவர்களின் பிறை நிலைப்பாடும், நம்பிக்கையும் ஆகும். அப்படியானால் ஹிஜ்ரி 1436ன் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையை சவுதி அரேபியா கடந்த 2015 செப்டம்பர் 24ஆம் தேதி வியாழக்கிழமை அன்று தொழுதார்கள். இவர்களது இயக்கமும் அதே செப்டம்பர் 24ஆம் தேதி வியாழக்கிழமை பெருநாள் தொழுகையை தொழுதது ஏன்? சவுதிக்கும் இவர்களுக்கும் ஒரே நாளில் கடந்த ஹஜ்ஜுப் பெருநாள் அமைந்தது எப்படி? பிறை முன்னோக்கித்தான் செல்லும் பின்னோக்கி வராது என்று பீ.ஜை. சொல்லி வருவதற்கு முரணாக 1436 துல்ஹஜ் பிறை எப்படி பின்னோக்கி வந்தது என்பதை ததஜ நவீன மத்ஹப் இமாம்(?) பீ.ஜை. விளக்குவாரா? தவறிழைத்தது யார்? நம்மை விமர்சிக்கும் முன்னர் இதையாவது இவர்கள் சிந்திக்கட்டும்.

**ஐயம் :** இந்திய நேரம், உலக நேரம் எல்லாம் மனிதன் உருவாக்கியதுதான், ஜெய்ப்பூருக்கும், காயல்பட்டினத்திற்கும் இந்திய ஸ்டாண்டர்ட் நேரம் (IST) ஒன்றுதான். ஆனால் True Solar Time என்பது வேறு. இதைப் புரிந்து கொள்வதற்கு விஞ்ஞான அறிவு வேண்டும் என்றும், நீங்கள் விக்கிபீடியா இணையதளத்தைத்தான் ஆதாரமாகக் கொள்வதாகவும் விமர்சனம் செய்யப்படுகிறதே. இதற்கு உங்கள் விளக்கம் என்ன?

**தெளிவு :** மேற்படி இரண்டு ஊர்களுக்குமிடையே நேர வித்தியாசம் இருக்குமே அல்லாமல் நாள் வித்தியாசம் இல்லை. ஒரு நாளுக்குரிய தேதிகள் ஊருக்கு ஊர் மாறுபடுவதில்லை என்பதை முன்னரே விளக்கி விட்டோம். இந்திய நேரம், உலக நேரம் என்பதெல்லாம் மனிதன்தான் உருவாக்கியது என்கின்றனர். அப்படியானால் உண்மையான சூரிய நேரம் True Solar Time என்று இவர்கள் வாதிக்கும் அந்த நேரத்தை கண்டுபிடித்தது யார்? என்பதையும் இவர்கள் சொல்ல வேண்டும். அந்த நேரத்தை மலக்குமார்களா கண்டுபிடித்தார்கள்?

தான் என்ன கேட்கிறோம் என்பதைக்கூட புரியாமல் ஏதோ கேள்விகளை அடுக்கிக் கொண்டு போய் விடுவோம் என்று எண்ணிக் கொண்டார்கள் போலும். இதைப் புரிந்து கொள்வதற்கு விஞ்ஞான அறிவு வேண்டும் என்று பீடிகை வேறு.

அப்படியானால், ‘சந்திரன் மேற்கில் உதிக்கிறது, மேற்கு திசையில்தான் சந்திரனை பார்ப்பீர்கள். சந்திரன் (பிறை) மேற்கில் உதித்து கிழக்கில் மறைகிறது’ என்று இவர்களது இயக்கத்தின் அசல் தலைவர் சொல்லியுள்ளது விஞ்ஞானமா அல்லது மெஞ்ஞானமா? என்பதையும் இவர்களே அறிவிக்கட்டும்.

இன்னும், தலைப்பிறை சவுதியில் உதிக்கிறது என்றால் சவுதியிலிருந்து பிறை ரிவேஸ்ல(Reverse) வராது, காரணம் அது மேற்கு உதிப்பதால் நம் தலைக்கு நேராக ஒரு ரவுண்ட் அடித்து வருவதற்கு 21:30 மணி நேரம் ஆகும் என்று இவர்களது தலைவர் சொன்னது எந்த விக்கிபீடியா இணையதளத்தில் உள்ளது?

மேலும், பிறை பிறந்தால்தான் இரவு ஆரம்பிக்கிறது. இரவில்தான் நாள் ஆரம்பிக்கிறது என்று அவர் சொன்னதும் விஞ்ஞான அறிவின் உச்சகட்ட முதிர்ச்சியில் வெளிப்பாடுதானோ? இவர்களின் விஞ்ஞான அறிவின் நிலைமை இந்த அளவு இருக்கும்போது Apparent solar time, Mean solar time, Standard time மற்றும் Universal Time என்று கேள்வி எழுப்புவது நகைப்புக்குரியது.

**ஐயம் :** உங்கள் ஹிஜ்ரி நாட்காட்டியானது International Date Line–IDL எனும் சர்வதேசத் தேதிக் கோட்டிலிருந்து ஒரு நாளைத் துவங்குவதாக கடமையாக்கப்பட்டுள்ளது. சர்வதேசத் தேதிக் கோட்டை பிரிட்டிஷ்காரர்கள்தான் கண்டுபிடித்து போட்டனர். எனவே உங்கள் ஹிஜ்ரி காலண்டர் இஸ்லாமிய நாட்காட்டியாக எப்படி ஆகும்?

**தெளிவு :** தேதிக்கோட்டின் மேற்குப்பகுதி வெள்ளியாக இருக்கும்போது அதன் கிழக்குப்பகுதி வியாழனாக இருப்பதுவும், கப்பலில் செல்லும் முஸ்லிம்கள் தொழும் திசை மாறுபடுவதையும் வைத்து இயற்கையாக அமைந்துள்ளது. தேதிக் கோட்டுக்கு மேற்கே தொழுபவர் மேற்கு நோக்கியும் கிழக்கே தொழுபவர் கிழக்கு நோக்கியும் ஒருவருக்கொருவர்

பிறரது உபதேசங்களைக் கேட்கவிடாமல் தடுப்பவர்கள் தாஃகூத் என்ற மனித ஷைத்தான்களே!

எதிரும் புதிருமாக முதுகைக் காட்டி தொழும் நிலையைப் பார்த்தும் கிழமை மாறுவதையும் அனுசரித்தும் தேதிக்கோடு இடப்பட்டுள்ளது. International Date Line–IDL எனும் சர்வதேசத் தேதிக் கோட்டுப் பகுதி யில்தான் ஒவ்வொரு கிழமையும் (நாள்) மாறுகிறது என்பதை ஒட்டுமொத்த உலக மக்களும் எவ்வித கருத்து வேறுபாடின்றி ஏற்றுக் கொண்டுள்ளனர். உதாரணமாக ஒவ்வொரு நாளும் சர்வதேசத் தேதிக் கோட்டுப் பகுதிக்கு அருகிலுள்ள கிழக்கத்திய நாடுகளான ஃபிஜி, நியூசிலாந்து போன்ற பகுதியிலிருந்து தான் புதிய நாள் துவங்குகிறது.

இதற்கு வெள்ளிக்கிழமையின் ஜுமுஆ தொழுகையை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். Dateline-க்கு அருகில் கிழக்குப் பகுதி நாடுகளிலுள்ள முஸ்லிம்கள்தான் முதலில் ஜுமுஆ தொழுகையை தொழுகின்றனர். பிறகு ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா என்று ஒன்றன்பின் ஒன்றாக அனைத்து நாடுகளிலுள்ள முஸ்லிம்களையும் அந்த ஜுமுஆ தொழுகை கடந்து செல்கிறது. பிறகு மேற்கில் அமெரிக்கா, அலாஸ்கா போன்ற நாடுகளிலுள்ள முஸ்லிம்கள் தொழுது முடித்த பின்னர், அதே சர்வதேசத் தேதிக் கோட்டின் இறுதிப் பகுதியான அமெரிக்கன் சமோவா பகுதியில் வெள்ளிக்கிழமையின் ஜுமுஆ தொழுகை முடிவடைகிறது. இதைத்தான் 24 மணி நேரங்கள் கொண்ட முழுமையான ஒருநாள் என்கிறோம். இதில் யாருக்கும் எத்தகைய மாற்றுக் கருத்துமில்லை. புரிந்து கொள்வதற்காக இந்த உதாரணம்.

இந்நிலையில், உங்கள் சந்திர ஹிஜ்ரி நாட்காட்டியானது Dateline-லிருந்து நாளைத் துவங்குவதாக உள்ளதே என்று வாதம் வைத்துள்ளனர். Dateline-லிருந்து நாள் துவங்குவது தவறு. அது ஹராம் என்ற எண்ணம் இவர்களுக்கு இருப்பது இக்கேள்வியிலிருந்து தெரிகிறது. அப்படியானால் பூமியின் எந்தப் பகுதியிலிருந்து ஒருநாள் துவங்குகிறது? என்பதை நடைமுறை உண்மையிலிருந்து எடுத்துக்காட்ட வேண்டும். மேலும் இன்று வெள்ளிக்கிழமைதான் (16.10.2015) என்பதை இவர்கள் ஒப்புக் கொள்கிறார்களா? இல்லையா? இன்றைய வெள்ளிக்கிழமை எங்கிருந்து ஆரம்பமாகியது என்பதையும் கூற வேண்டும்.

இன்னும் Dateline-I பிரிட்டிஷ்காரர்கள்தான் கண்டுபிடித்தனர் என்பதும் இவர்களின் முக்கிய வாதம். கி.பி.1884ல் Dateline-பகுதி அதுதான் என்று உலகம் ஒப்புக் கொள்வதற்கு சுமார் 600 வருடங்களுக்கு முன்னரே முஸ்லிம்கள் அந்தப் பகுதிக்கு சென்றுவிட்ட வரலாற்றை இவர்கள் படிக்கவில்லை. கி.பி. 1884க்கு முன்னரே சர்வதேசத் தேதிக் கோட்டுப் பகுதியில் வாழ்ந்த, கப்பலில் பிரயாணம் செய்த முஸ்லிம்கள் வெள்ளிக்கிழமை என்ற அந்த நாளில்தான் ஜுமுஆ தொழுகையை தொழுது இருப்பர்.

இந்நிலையில் Dateline-பகுதியை பிரிட்டிஷ்காரர்கள்தான் கண்டுபிடித்தனர் என்றால், கி.பி.1884க்கு முன்னர் பூமியின் எந்தப் பகுதி முஸ்லிம்கள், வெள்ளிக்கிழமையுடைய ஜுமுஆ தொழுகையை முதலில் நிறைவேற்றினர் என்பதை ஆதாரத்துடன் இவர்கள் நிரூபிக்க வேண்டும். கி.பி. 1884க்கு முன்னர் பூமியிலுள்ள முஸ்லிம்களுக்கு தொழுகைகளும், கிப்லாவும் இருக்கவில்லையா? நவூதுபில்லாஹ்.

கடந்த அக்டோபர் 1884ல், வாஷிங்டனில் நடைபெற்ற International Meridian Conference இல் சர்வதேசத் தேதிக் கோட்டுப் பகுதி என்று அறிவித்ததை ஏதோ பிரிட்டிஷ்காரர்கள் IDL-லை அகழ்வாராய்ச்சி செய்து புதிதாக உருவாக்கியதைப் போல சித்தரிக்கின்றனர். Dateline-பகுதி பிரிட்டிஷ்காரர்களின் தனிவுடமையல்ல.

முஸ்லிமல்லாதவர்களின் கண்டுபிடிப்புகள் ஹராம் என்று எண்ணிக் கொண்டார்கள் போலும். புதிய கண்டுபிடிப்புகளை நாம் பயன்படுத்தும் போது அவற்றை யார் கண்டுபிடித்தார்? அவருடைய மதம் என்ன? அவருக்கு எந்த ஊர்? என்று நாம் பார்ப்பதில்லை. அப்படி பார்க்க வேண்டிய அவசியமுமில்லை. கண்டுபிடித்த விஷயம் சரியாக இருந்து, மார்க்கத்தில் தடை இல்லாமலிருந்தால் போதுமானது. அவற்றை பயன்படுத்துவதில் எந்தத் தவறுமில்லை. உதாரணமாக முஸ்லிம்களாகிய நாம் தினமும் பயன்படுத்தும் தொழுகை கால அட்டவணையின் நேர அளவுகளின் சூத்திரத்தையும், அதன் கணக்கீட்டையும் கண்டுபிடித்தது யார்? என்று நாம் ஆராய்ச்சி செய்வதில்லை. அதை ஏற்று சரிகண்டு பின்பற்றத்தான் செய்கிறோம். யூதர்கள் கண்டு பிடித்த கடிகாரம், கணினி, தொலைபேசி, அலைபேசி, வாகனங்கள் போன்ற நவீன கருவிகளை நாம் பயன்படுத்தவில்லையா?

அதுபோலத்தான் அமெரிக்கன் சமோவாவையும் ஃபிஜி தீவுகளையும் பிரிக்கும் பகுதியாக உள்ள சர்வதேசத் தேதிக் கோட்டுப்பகுதி மிகச் சரியான இடத்தில் அமைந்துள்ளது. அந்த இடத்தில்தான் வியாழக் கிழமையிலிருந்து, வெள்ளிக்கிழமை மாறுகிறது. தினமும் கிழமை மாற்றம் அந்த இடத்தில்தான் நடைபெறுகிறது. அல்குர்ஆனின் 55:17வது வசனம் சிலாகித்துச் சொல்லும் இடமாகவும் இது இருக்கிறது. இவ்வாறு அல்லாஹ்வின் அத்தாட்சிகள் உள்ள இடமாக இவ்விடம் திகழ்கிறது.

இன்னும் இஸ்லாமிய சந்திர ஹிஜ்ரி நாட்காட்டி மார்க்க அடிப்படையில் அமைந்ததுதான் என்பதற்கு குர்ஆன் சுன்னாவிலிருந்து நேரடி ஆதாரங்களை மக்கள் மன்றத்தில் சமர்ப்பித்து விட்டோம். அவ்வாறு நிரூபித்த பின்னரும் உங்கள் சந்திர ஹிஜ்ரி காலண்டர் இஸ்லாமிய நாட்காட்டியாக எப்படி ஆகும்? என்று கேள்வி எழுப்பியுள்ளனர். ஹிஜ்ரி நாட்காட்டியின் பற்றி அடிப்படை ஞானமில்லா

9:31 வசனப்படி இம்மதகுருமார்களை வழிபடுகிறவர்கள் நேர்வழி பெறவேமாட்டார்கள்.

மல் இவர்கள் விமர்சிப்பது துரதிஷ்டவசமும், துர்பாக்கிய நிலையுமாகும்.

எவ்வித கருத்து வேறுபாடின்றி இவர்களே ஏற்றுக் கொண்டுள்ள தொழுகை அட்டவணையின் கிழமைகள் எந்த Dateline-யை அடிப்படையாகக் கொண்டது? மேலும் அதன் கிழமைகள் எங்கிருந்து துவங்குகிறது? என்பதையாவது இவர்கள் சிந்திக்கக் கூடாதா?

இவர்களது பிறை நிலைப்பாட்டின்படி பிறை பார்க்கும் எல்லைக்கு மார்க்க ஆதாரமுண்டா என்பதை ஆய்வு செய்யாமல் Dateline பற்றி தாறுமாறாக விமர்சிப்பது நகைப்புக்குரியது Dateline-பகுதியை ஹிஜ்ரி கமிட்டி கிரையப் பத்திரம் செய்து வாங்கிவிடவில்லை. தற்போதிருக்கும் உண்மையான சர்வதேசத் தேதிக் கோட்டுப் பகுதியை மாற்றி, தான் விரும்பும் இடத்திலிருந்துதான் ஒவ்வொரு நாளும் துவங்க வேண்டும் என்ற கற்பனை ஆசையில் மிதக்கின்றனர். அவர்கள் விரும்பும் அந்த இடத்தை புதிய சர்வதேசத் தேதிக் கோட்டுப் பகுதியாக (New IDL) அறிவித்து உலக நாடுகளை ஏற்றுக் கொள்ளச் செய்யட்டுமே! பிறகு அதன் அடிப்படையில் ஒரு சந்திரக் காலண்டரையும் தயாரித்து மக்கள் மத்தியில் தரட்டும். அதன் பின்னர் சந்திர ஹிஜ்ரி நாட்காட்டி இஸ்லாமிய நாட்காட்டியா? என்று நம்மை நோக்கி கேள்வி எழுப்பட்டும். இவர்களது மனோ இச்சைகள் ஒருபோதும் மார்க்கமாகாது.

**ஐயம் :** உலக நேர (Universal Coordinated Time - UTC) கணக்கீட்டின் அடிப்படையில்தான் உங்கள் காலண்டரின் தேதிகளை அமைத்துள்ளீர்கள். UT எனும் இந்த உலக நேரம் என்பதற்கு குர்ஆன் ஹதீஃதில் ஆதாரமில்லை. இந்நிலையில் உங்கள் ஹிஜ்ரி காலண்டரை எப்படி இஸ்லாமிய நாட்காட்டி என்று கூறுகிறீர்கள்? இந்த கேள்விக்கு விடை என்ன?

**தெளிவு :** உலக நேர (Universal Coordinated Time - UTC) என்பதற்கு குர்ஆன் ஹதீஃதில் ஆதாரமில்லை என்று வாதம் எழுப்பியுள்ளனர். அப்படியானால் இன்று காலை 10 மணி என்கிறோம். நான் நாளை மாலை 5 மணிக்கு வருகிறேன் என்கிறோம். இவ்வாறான நமது அன்றாட வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த இந்த லோக்கல் மணிநேரக் கணக்கிற்கு (Local Time) குர்ஆன், ஹதீஃத் ஆதாரம் இருக்கிறதா? என்பதற்கும் இவர்களே விளக்கியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

உலக நேரம் UT என்பதை ஏதோ கழிவுகட்டை நேரமாக சித்தரிக்கும் போக்கு இக்கேள்வியில் தெரிகிறது. நம்மைப் பொறுத்தவரை Local Time, Universal Time போன்ற எந்த நேரக் கணக்கீட்டையும் வெறுப்பவர்கள் அல்லர். அந்தந்த நேரக் கணக்கீட்டை எது எதற்குப் பயன்படுத்த வேண்டுமோ அது அதற்கு பயன்படுத்த வேண்டும் என்கிறோம். கால நேரத்தை இழிவாகப் பேசக்கூடாது என்பதுதான் ஒரு முஸ்லிமின் நிலைப்பாடாக இருக்க வேண்டும் என்கிறோம்.

நேரங்கள் குறித்து பல்வேறு குர்ஆன் வசனங்கள் உள்ளன. சூரியனும், சந்திரனும் திட்டமிட்டக் கணக்கின்படியும், கணக்கிடும்படியும் உள்ளதாக வல்ல அல்லாஹ் குறிப்பிடுகிறான். (55:5, 6:96)

மேலும் அல்லாஹ் கூறியதாக நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆதமுடைய மக்கள் காலத்தை திட்டுகிறார்கள். ஆனால் நானே காலமாக (காலத்தின் போக்கை நிர்ணயிப்பவனாக) உள்ளேன். என்னுடைய கரத்திலேயே இரவும், பகலும் உள்ளன. நூல்: புகாரி, முஸ்லிம், அஹ்மத், அபூதாவூத், தாரமி, முஅத்தா.

எனவே நேரக் கணக்கீடுகளில் எதையும் நாம் வெறுத்து ஒதுக்க வேண்டியதில்லை. உலக நேரம் UT என்பதும் இஸ்லாத்திற்கு சொந்தமானதுதான் என்பதை புரிந்து கொள்ள மேற்கண்ட ஆதாரங்களே போதுமானது.

சந்திர மாதத்தின் இறுதிநாள் சங்கம தினம், சங்கமம் என்பது சர்வதேச சமூகத்திற்கும் உள்ள ஒரு பொதுவான சர்வதேச நிகழ்வு. அந்த சங்கம நிகழ்வை சர்வதேச நேரக் கணக்கீடான உலக நேரத்தில்தான் UT குறிப்பிட வேண்டும். இந்த அறிவியலின் அடிப்படையான விஷயத்தை விபரம் தெரிந்தவர்கள் மறுக்கமாட்டார்கள்.

வியாபார நோக்கில் தங்கள் இயக்கத் தலைமை அச்சடித்து வருடந்தோறும் வெளியிடும் குத்து மதிப்பு காலண்டர்களின் தேதிகள், பிறைகளின் வடிவ நிலைகளோடு முரண்படுவது பொதுமக்கள் மத்தியில் வெட்ட வெளிச்சமாகி விட்டது. அதில் விரக்தியுற்றவர்கள் மக்களைத் திசை திருப்புவதற்கு உலக நேரத்தை UT மையப்படுத்தி சந்திர ஹிஜ்ரி காலண்டரை இஸ்லாமிய நாட்காட்டி என்று எப்படி கூறுகிறீர்கள்? என்று விமர்சிப்பதின் சூழ்ச்சி நமக்கு புரியத்தான் செய்கிறது.

**(குறிப்பு)** இந்த ஐயங்கள் அனைத்தும் ததஜ என்ற தறுதலை ஜமாஅத்தினர் அறிவு குறைந்த மக்களை வழி கெடுத்து நரகில் தள்ள அறிவுக்கே பொருந்தாத அர்த்தமற்ற ஐயங்களைக் கிளப்பி மக்களைக் குழப்பி அவர்களைத் தடுமாறச் செய்ய முற்படுகின்றனர். அவர்களது ஆணவமும், பெருமையும் அவர்களை நேர்வழியை ஏற்கவிடாது (பார்க்க 7:146, 27:14, 45:23, 47:24,25) ஆயினும் அவர்களின் வசீகர, சூன்ய வலையில் சிக்கியுள்ள அல்லாஹ் நாடும் ஒரு சிலராவது உண்மையை ஒப்புக்கொண்டு நேர்வழிக்கு வர மாட்டார்களா என்ற நல்லெண்ணத்தில் இந்த விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

இந்த தாஃகூத்களான மனித ஷைத்தான்களின் பிடியிலிருந்து விடுபட்டு அனைவரது உபதேசங்களையும்